**பத்திரிகை வெளியீடு**

கொழும்பு, 4 ஒக்டோபர் 2018

## நெஸ்லே நிறுவனம் தேங்காய் கொப்பரை உற்பத்திகளுக்காக ஜனாதிபதி ஏற்றுமதி விருதுகள் நிகழ்வில் 'அதிகூடிய அந்நியச் செலாவணி ஈட்டுனர்' என்ற விருதை வென்றுள்ளது

*இலங்கையில் அந்நியச் செலாவணி வருவாயை மேம்படுத்தும் அதேசமயம், உள்நாட்டில் வாழ்வாதாரத்திற்கும் உதவி வருகின்றது*

அண்மையில் இடம்பெற்ற ஜனாதிபதி ஏற்றுமதி விருதுகள் நிகழ்வில் தேங்காய் கொப்பரை உற்பத்திப் பிரிவில் 'அதிகூடிய அந்நியச் செலாவணி ஈட்டுனர்' என்ற விருதை வென்றுள்ள நெஸ்லே நிறுவனம், தனது வெற்றிப்பயணத்தை தொடர்ந்தும் சிறப்பாக முன்னெடுத்து வருகின்றது. தேசிய ஏற்றுமதிகளுக்கு வலுவான பங்களிப்பினை ஆற்றி, உள்நாட்டிலுள்ள தெங்கு தோட்டக்காரர்கள் மற்றும் அந்த தோட்டங்களில் பணியாற்றுபவர்களுக்கு நிலைபேற்றியல் கொண்ட வாழ்வாதாரத்தை தோற்றுவிப்பதற்காக மேற்கொண்டு வருகின்ற முயற்சிகளுக்கான இனங்காணல் அங்கீகாரமாக நிறுவனத்திற்கு கிடைக்கப்பெற்றுள்ள ஏழாவது ஜனாதிபதி ஏற்றுமதி விருதாக இது அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

உலகில் மிகப் பாரிய அளவில் தேங்காய்ப் பால் மா உற்பத்தியை ஏற்றுமதி செய்யும் நிறுவனங்களில் ஒன்றாக நெஸ்லே லங்கா திகழ்ந்து வருகின்றது. உலகில் 50 இற்கும் மேற்பட்ட நாடுகளுக்கு இந்த உற்பத்தி ஏற்றுமதி செய்யப்பட்டு வருவதுடன், உள்நாட்டில் *Maggi* வர்த்தகநாமத்தின் கீழ் அது விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. குருணாகலில் அமைந்துள்ள நெஸ்லே நிறுவனத்தின் அதிநவீன வசதிகள் கொண்ட தொழிற்சாலையில் இது உற்பத்தி செய்யப்படுவதுடன், ஆண்டுதோறும் இலங்கையில் 90 மில்லியன் வரையான தேங்காய்களை கொள்முதல் செய்கின்ற நிறுவனம், உள்நாட்டில் தெங்கு செய்கையில் ஈடுபட்டுள்ள 6,000 இற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு வாழ்வாதாரத்தை வழங்கி வருகின்றது.

நெஸ்லே நிறுவனத்தின் விநியோகச் சங்கிலிப் பிரிவின் உப தலைமை அதிகாரியான ஜோஸ் ரோல்டன் அவர்கள் இது தொடர்பில் கருத்து வெளியிடுகையில், *"இலங்கையில் ஏற்றுமதியாளர்களுக்கு கிடைக்கப்பெறுகின்ற அதியுச்ச இனங்காணல் அங்கீகாரமாக ஜனாதிபதி ஏற்றுமதி விருதுகள் அமைந்துள்ளன. இலங்கையின் பிரதான உற்பத்திகளில் ஒன்றான தேங்காயை பயன்படுத்தி, தயாரிக்கப்பட்ட ஒரு உற்பத்தியை உலகெங்கிலும் முன்னிலை வகிக்கும் ஒரு உற்பத்தியாக மாற்றியமைத்துள்ளமையையிட்டு நாம் பெருமைப்படுவதுடன், எமது வெற்றிக்கு கிடைக்கப்பெற்ற ஒரு இனங்காணல் அங்கீகாரமாக இவ்விருதை கௌரவத்துடன் ஏற்றுக்கொள்கின்றோம். உலகில் மிகவும் விரும்பப்படுகின்ற உற்பத்திகளுள் ஒன்றாக இலங்கையின் தேங்காய் பால் மால் உற்பத்தியை மாற்றியமைப்பதற்கு எமது முயற்சிகள் வழிகோலியுள்ளதுடன், அதிசிறந்த சுவை மற்றும் தரத்தை இதன் மூலமாக வழங்கி வருகின்றோம்,"* என்று குறிப்பிட்டார்.

1980 கள் முதற்கொண்டு தேங்காய் பால் மா உற்பத்தியில் நெஸ்லே நிறுவனம் முன்னோடியாகச் செயற்பட்டு வந்துள்ளதுடன், உள்நாட்டுத் தொழிற்துறை மீது தொடர்ந்தும் முதலீடுகளை மேற்கொண்டு வருகின்றது. தெங்கு அபிவிருத்திச் சபையுடன் இணைந்து 2016 ஆம் ஆண்டில் நெஸ்லே தெங்கு அபிவிருத்தித் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டிருந்தது. இத்திட்டத்தின் கீழ் தெங்குத் தோட்டக்காரர்கள் வர்த்தகரீதியாக தெங்குச் செய்கையில் ஈடுபடுவதற்கு ஆதரவளித்து வருவதுடன், நெஸ்லே நிறுவனத்துடன் ஒப்பந்த அடிப்படையில் தமது வீட்டு வளவுகளில் தென்னை மரங்களை வளர்ப்பவர்களையும் உள்நாட்டுப் பாவனைக்கு தேங்காய்களை உற்பத்தி செய்வதற்காக ஊக்குவித்து வருகின்றது. பாரம்பரிய தென்னை முக்கோணப் பிரதேசம் மற்றும் வட-மத்திய மற்றும் வட மாகாணங்கள் போன்ற பரீட்சார்த்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்ற பிரதேசங்களில் உள்ள மக்களுடன் இணைந்து இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. நெஸ்லே தெங்கு அபிவிருத்தித் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர், 3,000 தெங்குத் தோட்டக்காரர்கள் மற்றும் நெஸ்லே நிறுவனத்துடன் ஒப்பந்த அடிப்படையில் தமது வீட்டு வளவுகளில் தென்னை மரங்களை வளர்ப்பவர்களுக்கு விரைவாக வளர்ச்சி கண்டு தேங்காய் காய்க்கின்ற விசேட கலப்பு வகையைச் சேர்ந்த, கிட்டத்தட்ட 20,000 தென்னங்கன்றுகளை அது வழங்கியுள்ளது. இத்திட்டத்தில் பங்கேற்றுள்ளவர்களுக்கு வழக்கமான பயிற்சி, மூலவளங்கள் மற்றும் வேளாண்மை உதவிகள் வழங்கப்பட்டு வருவதுடன், நெஸ்லே நிறுவனத்தால் அமைக்கப்பட்டுள்ள மாதிரித் தெங்குத் தோட்டங்களில்

கைக்கொள்ளப்படுகின்ற மிகச் சிறந்த நடைமுறைகளை ஒப்பிட்டு தமது தெங்குச்செய்கையை முன்னெடுக்கவும் அவர்களை ஊக்குவித்து வருகின்றது.

நெஸ்லே லங்கா நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரான ஷிவானி ஹெக்டே அவர்கள் இது தொடர்பில் கருத்து வெளியிடுகையில், *"ஏற்றுமதித் துறைக்கான எமது பங்களிப்பு மற்றும் எமது பெறுமதிச் சங்கியிலின் அங்கமாக உள்ள மக்களின் வாழ்வை மேம்படுத்துவதற்கு நாம் முன்னெடுத்து வருகின்ற பணிகள் ஆகியவற்றுக்காக மீண்டும் ஒரு முறை இனங்காணல் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளமை எமக்கு மிகுந்த கௌரவம் அளிக்கின்றது. உள்நாட்டு வழங்குனர்கள் மத்தியில் தராதரங்களை மேம்படுத்த நாம் உதவி வருவதுடன், எதிர்கால தலைமுறைகளுக்கு தொடர்ந்தும் தங்குதடையின்றி தேங்காய் கிடைக்கப்பெறுவதை உறுதி செய்தவாறு, கிராமப் புற சமூகங்கள் மத்தியில் விவசாயிகளுக்கும், அவர்களது குடும்பங்களுக்கும் பயனளிக்கும் வகையில் நிலையான வருமானமொன்றை ஈட்டிக்கொள்ள உதவுகின்ற பயிர்ச் செய்கையில் ஈடுபட நாம் அவர்களுக்கு வலுவூட்டி வருகின்றோம். நாம் மேற்கொள்கின்ற எந்தவொரு முதலீடும் வெறுமனே நிறுவனத்திற்கு மட்டும் பயனளிப்பதாக அமைந்து விடாது, ஒட்டுமொத்த நாட்டிற்கும் பயனளிப்பதாக அமைய வேண்டும் என்பதன் மீது நாம் வலுவான நம்பிக்கை கொண்டுள்ளதுடன், எமது செயற்பாடுகள் அனைத்திலும் இதனை தொடர்ந்தும் பேணி வருவதையிட்டு நாம் பெருமைப்படுகின்றோம்,"* என்று குறிப்பிட்டார்.

ஏற்றுமதித் துறையில் கணிசமான பங்களிப்புக்களை வழங்கியுள்ள நிறுவனங்களுக்கு இனங்காணல் அங்கீகாரத்துடன், விருதுகளையும் வழங்கும் ஒரு வருடாந்த நிகழ்வாக ஜனாதிபதி ஏற்றுமதி விருதுகள் நிகழ்வு இடம்பெற்று வருகின்றது. இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையால் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது. 2017 ஆம் ஆண்டில் 'தேங்காய் கொப்பரை உற்பத்திப் பிரிவில் அதிகூடிய பெறுமதி சேர் ஏற்றுமதியாளர்', 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் 'ஏற்றுமதிகளில் ஈடுபட்டுள்ள மிகச் சிறந்த பல்தேசிய நிறுவனம்', 2013 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் 'தேங்காய் மற்றும் தேங்காயை மூலமாகக் கொண்ட உற்பத்திப் பிரிவில் மிகச் சிறந்த ஏற்றுமதியாளர்' மற்றும் 2011 ஆம் ஆண்டில் 'உணவு மற்றும் ஏனைய பான வகை உற்பத்திப் பிரிவில் மிகச் சிறந்த ஏற்றுமதியாளர்' ஆகிய விருதுகளையும் நெஸ்லே நிறுவனம் இதற்கு முன்னர் வென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

---